ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2447/81 - 2025 අගෝස්තු මස 02 වැනි සෙනසුරාදා - 2025.08.02
*2447/81 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ் ஹொரணை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

ஹொரணை நகர சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், ஹொரணை நகர சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட சந்தனம் ஜோன்சன் போல் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான ஹொரணை நகர சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ரஜீவ வாசுல குணசேகர என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

ஹொரணை நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான வன்னகுவத்த வடுகே காலிந்திர ஜயவீர பிரனாந்து ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ரஜீவ வாசுல குணசேகர என்பவர் ஹொரணை நகர சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**காலிந்திர ஜயவீர பிரனாந்து,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
ஹொரணை நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
களுத்துறை,
*2025, யூலை 31.*

EOG *08 - 0041*